**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 1</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஆணையாளர் அவர்களின் 10/2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.75**

**தீர்மானம் :** பதிவு செய்யப்பட்டது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 2</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.71/2021 நாள்.13.09.2021–ன் படி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் வார்டு எண்.01, சக்தி லே–அவுட் மற்றும் வார்டு எண்.07, அண்ணாமலையார் நகர் பகுதியில் புதிதாக பூங்கா அமைக்க ரூ.20.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1146/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) அரசு மானியம் வழங்கும் தொகையில் பணி மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.76**

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் : 3**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள்.13.11.2021ல் தெரிவித்துள்ளபடி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2020-2021ன்(Tied Grant) கீழ் ரூ.52.66 இலட்சம் வரப்பெற்றுள்ளதற்கு கீழ்காணும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **Tied Grant 2nd Installment - ரூ.26.33 இலட்சம் ஒதுக்கீடு** | |
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.15 திரு.வி.க.தெரு பொதுக்கழிப்பிடத்தில் மராமத்து பணி மேற்கொள்ளுதல். | 4.00 |
| 2 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.07 அண்ணா நகர் சமுதாய கழிப்பிடத்தில் மராமத்து பணி மேற்கொள்ளுதல். | 3.00 |
| 3 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 காந்திநகர், வார்டு எண்.12 அம்மன் நகர், வார்டு எண்.13 இராமநாதபுரம், வார்டு எண்.16 சேரன் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடம் மற்றும் வார்டு எண்.16 வாரச்சந்தை பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல். | 2.50 |
| 4 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 காந்திநகர் பகுதியில் புதிதாக 0.25 TPD கொள்ளளவு உள்ள உரமாக்கல் மையம் (Onsite Compost Center) கட்டுதல் பணி. | 4.80 |
| 5 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 தினசரி சந்தை பகுதியில் புதிதாக 0.25 TPD கொள்ளளவு உள்ள உரமாக்கல் மையம் (Onsite Compost Center) கட்டுதல் பணி. | 4.80 |
| 6 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 அம்மன் நகர் சமுதாய கழிப்பிட வளாகத்தில் புதிதாக 0.25 TPD கொள்ளளவு உள்ள உரமாக்கல் மையம் (Onsite Compost Center) கட்டுதல் பணி. | 4.80 |

| | | |
|---|---|---|
| 7 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 அவினாசி ரோடு பகுதியில் புதிதாக ஆழ்துளை கிணறு, பிரதான குழாய் மற்றும் Sintex Tank அமைத்தல். | 2.50 |
| **UnTied Grant 1st Installment - ரூ.26.33 இலட்சம் ஒதுக்கீடு** | | |
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் ஏற்கனவே உள்ள தெரு விளக்குகளை(FTL, SVL,T5, CFL) மாற்றி புதிதாக LED விளக்குகள் பொருத்துதல் பணி. | 24.50 |
| 2 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06 காமாட்சியம்மன் கோவில் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு பிரதான குடிநீர் குழாய் அமைத்தல் பணி. | 1.50 |
| 3 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளுக்கு தானியங்கி ON/OFF Switchs பொருத்துதல் பணி. | 0.90 |

மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.53.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1841/2020/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 77**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 4**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் UTIS செயல்படுத்தப்பட்டு வருவதால், இதற்கு (VPN Connectivity Charges) Broadband தொகை 3 மாத காலத்திற்கு 01.01.2021 முதல் 31.03.2021ம் தேதி வரை ரூ.48295/- நகராட்சி நிதியிலிருந்து செலுத்தக்கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதம் ந.க.எண்.29280/2020/WB நாள்.29.09.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.48295/- M/s.BSNL, Tamilnadu Circle, Chennai என்ற நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1347/2020/பி2)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ)அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.78**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 5</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக நான்கு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.10.2021 முதல் 30.11.2021 வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 30.11.2021 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதால் தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.12.2021 முதல் 31.12.2021 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந. க. எண்.387/2017/இ1)

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.79**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 6</u>**

15வது மத்திய நிதிக்குழு மானியம் 2020–2021ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட ஜெ.ஜெ.நகர் பிரதான குடிநீர் குழாயின் PVC பைப்புகளை மாற்றி புதிதாக 150mm DI K7 பைப்புகள் பொருத்துதல் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.274 நாள்.31.12.2020ன்படி அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து 02.02.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேற்படி பணிக்கு 15.02.2021 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

மேலும் மேற்கண்ட பணியானது இதுநாள் வரை ஆரம்பிக்கப்படாமல் உள்ளது. மேற்படி பணியில் வாரச்சந்தை மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியிலிருந்து ஜெ.ஜெ.நகர் வரை மொத்தமுள்ள 1200மீட்டரில் 410மீட்டர் அளவிற்கு மட்டுமே பிரதான குழாய் மாற்றி அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருந்தது. தற்போது 410மீட்டர் அளவிற்கு 150mm DI K7 பிரதான குழாய்கள் மாற்றப்பட்டு மீதமுள்ள 790மீட்டர் அளவிற்கு மாற்றப்படாமல் இருந்தால் பிற்காலத்தில் குடிநீர் பிரதான குழாய்கள் உடைப்புகள் மற்றும் பழுதுகள் தொடர்ந்து ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளது. எனவே மேற்படி பணியை ரத்து செய்துவிட்டு மாற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந. க. எண்.1841/2020/இ1)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.80**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 7**

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பமின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 **(Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016)**விதி 5, துணை விதி (1) ன் மூலம் புன்செய் புளியம்பட்டி நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னணு சேவை விநியோக **(Electronic Service Delivery System)**அமைப்பின் கீழ் **https://tnurbanepay.tn.gov.in/** என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது என்ற அறிவிப்பு, ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.7000/- க்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர் | | | சேவையை வழங்குவதற்காக நியமிக்கப் பட்ட அதிகாரி |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம் Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு New Water Connection | |
| | | ii | புதிய குடிநீர்இணைப்புக்கான கட்டணம் Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கான விண்ணப்பம் | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம் Application for movie shooting | |

| | | | | |
|---|---|---|---|---|
| | Apply for NOC/ Clearance | | | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | குடிநீர்இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br><br>NOC for Water Connection (Industrial) | |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br><br>Movie Shooting Payment | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br><br>NOC for Movie Shooting | |
| | | v | தொழிற்சாலை பயன்பாடு பாதாளசாக்கடை இணைப்புக்கான தடையின்மை சான்று<br><br>NOC for UGD Connection for Industrial | |
| 3 | சுகாதார சான்றிதழ்<br><br>Sanitary Certificate | i | சுகாதார சான்றிதழ்<br><br>Sanitation Certificate | |
| 4 | கட்டிட அனுமதி<br><br>Building Plan Approval | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br><br>Building Plan Work Progress | |
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணி முன்னேற்ற அறிக்கை<br><br>Building Plan Work Progress last story | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br><br>Complete report for Tax Assessment | |
| | | iv | மனைப்பிரிவுஅங்கீகார கட்டணம்<br><br>Layout Approval Payment | |
| | | v | மனைப்பிரிவுஅங்கீகாரம்கோருத ல்<br><br>Layout Approval Request | |
| | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br><br>Notice for Commencement Work | |
| | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br><br>Permission for Demolition for Building | |
| | | viii | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமகட்டணம்<br><br>Planning Permission with Building License Payment | |
| | | ix | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம் (12 மீட்டருக்குகீழ்)<br><br>Planning Permission with Building License (Below12 mts) | |
| | | x | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுரஅடிக்குகீழ்)<br><br>Planning Permission with | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | Building License (Below 1200 Sq.ft) | |
| | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு<br>Registration of Professionals/Developers | |
| | | xii | தொழில் வல்லுநர்/டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு<br>Registration of Professional/ Developers Certificate | |
| | | xiii | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கோரிக்கை<br>Renewal Building Plan Request | |
| | | xiv | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கட்டணம்<br>Renewal Building Plan Payment | |
| | | xv | தொழில் வல்லுநர்கள்/டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு<br>Renewal Registration of Professional/Developer | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம் பதிவு - தேடல்<br>Trade Registration – Search | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ii | தொழில் உரிமம் புதுப்பித்தல் - தேடல்<br><br>Trade Renewal – Search | |
| 6 | சொத்து வரி<br><br>Property Tax | i | வரிவிதிப்புமுழுவிவரம்<br><br>View Assessment History | |
| | | ii | வரி விதிப்பு விவரம் காண<br><br>View Assessment | |
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br><br>New Assessment request | |
| | | ii | தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை மீள சமர்ப்பிப்பு<br><br>Return Submission | |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br><br>Birth & Death | i | எனது சான்றிதழ்<br><br>My Certificate | |
| 9 | சாலை துண்டிப்பு<br><br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br><br>Road Cutting Permission | |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br><br>Road Cutting Payment | |

**அலுவலக குறிப்பு** : மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந,க.எண் 1549/2021/சி1)**

**தீர்மான எண்.81**

**தீர்மானம் :** ஒப்புதல் வழங்கப்பட்டது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 8**

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2018-2019 ஆம் ஆண்டு திட்டத்தில் வார்டு எண்.10, தில்லைநகர் பகுதியில் நுண் உரம் செயலாக்க மையம் அமைக்க மாநில உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகள் நாள்.13.08.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.22866/2018/பி3 நாள்.23.08.2018ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.18281/2017/DO1 நாள்.31.08.2018ன் படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

| Sl.No | Name of Work | Estimate Amount (Rs.in Lakhs) | ER No |
|---|---|---|---|
| 1 | Construction of Micro Compost Centre at Ward | Rs.53.60 Lakhs | 336A/2018-19 |

| | | | |
|---|---|---|---|
| | No. 10, Thillai Nagar with processing Capacity of 3 TPD in Punjai Puliampatti Municipality. | | |

இப்பணிக்கு 18.09.2018 அன்று மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 28.09.2018 அன்று இந்நகராட்சி செயல்முறை கடிதத்தின்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

தில்லைநகர் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் நுண் உரம் செயலாக்க மையம் (3 TPD) அமைக்க வேலை உத்தரவு வழங்கி கட்டிடம் கட்ட அஸ்திவாரம் (Earth work) பணி துவங்கப்பட்ட நிலையில், மேற்படி இடத்தில் நுண் உரம் செயலாக்க மையம் கட்டப்படுவதை தவறாக உரம் தயாரிக்கும் தொழிற்சாலை கட்டுவதாகவும், அதனை (Fertilizer Manufacturing Unit) சம்பந்தப்பட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் அனுமதி பெறாமல் கட்டப்படுவதாக ஆட்சேபித்து W.P.No. 28511/2018 மற்றும் W.P.No. 33258/2018 சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இடைக்கால தடை உத்தரவு 09.10.2018ல் பிறப்பிக்கப்பட்டது.

மக்கும் குப்பையை உரமாக்க தில்லை நகரில் கட்ட உத்தேசிக்கப்பட்ட நுண் உரம் செயலாக்க மையம் அவசியம் தேவைப்படுவதால் மாற்று இடமாக புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.16ல் 22 ஏக்கர் பரப்பளவு கொண்ட வாரச்சந்தை வளாகத்திற்குள் ஏற்கனவே செயல்பட்டு வரும் நுண் உரம் செயலாக்க மையத்திற்கு வடபுறத்தில் சுற்றுச்சுவருடன் கூடிய 3 TPD நுண் உரம் செயலாக்க மையம் அமைக்க திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு 18.12.2020 ஆம் தேதியன்று கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதில், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.24859/2020/தி3 நாள்.01.02.2021ன் படி திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, இந்நகராட்சி செயல்முறை கடிதத்தின்படி இப்பணிக்கு 01.02.2021 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி பணியானது தொடங்கப்பட்ட நிலையில் அரசியல் கட்சியினர் மற்றும் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தாலும், சட்டமன்ற தேர்தல் 2021 அறிவிக்கப்பட்டு தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் இருந்ததாலும், மேலும் கொரோனா நோய்த்தொற்று பரவல் மற்றும் ஊரடங்கு காரணமாகவும் மார்ச் 2021 முதல் 30.07.2021 வரை இப்பணியினை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வலுவலகத்திலிருந்து 23.07.2021ல் ஒப்பந்ததாரருக்கு இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பொதுமக்கள் ஏற்கனவே ஒரு நுண்உரம் செயலாக்க மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருவதால் அதன் அருகில் மீண்டும் ஒரு நுண்உரமாக்கல் மையம் அமைக்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்து வருவதாலும் ஒப்பந்ததாரர் 25.06.2021ம் தேதிய கடிதத்தில் பணியினை தடையின்றி மேற்கொள்ள இயலாத சூழல் காரணமாக காலதாமதம் ஏற்படுவதுடன் கட்டுமான பொருட்களின் விலை உயர்வு காரணமாகவும் திருத்திய மதிப்பீடு வழங்கக் கோரியுள்ளார். இப்பணி எடுக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்து விட்டதாலும் பொதுமக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவிப்பதாலும் இப்பணியை ரத்து செய்து விட்டு எதிர்கால தேவைக்காக திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2.0ன் கீழ் மாற்றுப்பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், நகரில் தற்போது சேகரிக்கப்பட்டு வரும் மக்கும் கழிவுகள் 4.50 டன் ஏற்கனவே வாரச்சந்தை வளாகத்தில் உள்ள நுண் உரமாக்கல் மையத்தில் 3.00டன் கழிவுகள் மற்றும் அலுவலக பூங்கா வளாகத்தில் Onsite Compost Center முறையில் 0.25டன் கழிவுகள் செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. கூடுதலாக உள்ள 1.25டன் மக்கும் கழிவுகளை நகரில் நான்கு இடங்களில் 1.25 டன்

கொள்ளளவில் Onsite Compost Center முறையில் ரூ.23.90 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் தொகையில் எடுத்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, வாரச்சந்தையில் இரண்டாவது நுண்ணுயிர் உரமாக்கல் மையம் கட்ட வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியை ரத்து செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 263 /2018/இ1)**

**அலுவலகக் குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.82**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்

**<u>பொருள் எண் : 9</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, வாரச்சந்தை மேம்படுத்துதல் பணிக்காக ரூ.250.00 இலட்சம் ஒதுக்கப்பபட்டுள்ளதன் அடிப்படையில் உரிய திட்ட மதிப்பீடுகள் மற்றும் கருத்துரு தயார் செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரை பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்ட மதிப்பீடு மற்றும் கருத்துருக்கள் 27.11.2021 அன்று TUFIDCO நிறுவனத்தின் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அனைத்து கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த பணிகள் மேற்கொள்ள கட்டமைப்பு வடிவமைப்பில் உரிய திருத்தங்கள் செய்து மீளவும் சமர்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியை சார்ந்த முக்கிய பிரமுகர்கள் மற்றும் வியாபாரிகளின் கோரிக்கையின் படி 29.11.2021 அன்று நகராட்சி அலுவலகத்தில் கலந்தாலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் தற்போது நடைபெறும் தினசரி சந்தையானது பேருந்து நிலையம் அருகில் கடந்த 2004ம் ஆண்டில் AC சீட்டினால் அமைக்கப்பட்ட கட்டிடத்தில் செயல்பட்டு வருவதாலும், தினசரிசந்தை அமைந்துள்ள

பகுதியானது போக்குவரத்திற்கு இடையூராகவும் மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள போதிய இடவசதி இல்லாத காரணத்தாலும், வாரச்சந்தை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு பதிலாக வாரச்சந்தை வளாகத்தில் புதிதாக தினசரி சந்தைக்கான கட்டமைப்பு பணிகள் செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே நகரின் வளர்ச்சி மற்றும் பொது மக்களின் தேவையினை கருத்தில் கொண்டு உரிய கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுடன் வாரச்சந்தை வளாகத்தில் சந்தை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வாரச்சந்தைக்காக மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு பதிலாக, புதிதாக தினசரி சந்தைக்கான கட்டமைப்பு பணிகள் மேற்கொண்டு பணிகள் நிறைவு பெற்ற பின்னர் பேருந்து நிலையம் அருகில் செயல்பட்டு வரும் தினசரி சந்தையை வாரச்சந்தை வளாகத்திற்கு இடமாற்றம் செய்துகொள்ளவும் அதற்காக தேவைப்படும் கூடுதல் நிதியை புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்து தர கோரி தயார் செய்துள்ள கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1146/2021/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.83**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021-ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் :10**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21326/2021/இ3 நாள்.09.09.2021 மற்றும் சட்டமன்ற அறிவிப்பு 2021-2022ன் படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை மேம்படுத்துதல் பணிக்கு ரூ.250.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டது. மேலும் அப்பணிக்கான பொதுமக்கள் கலந்தாலோசனைக் கூட்டம் 14.10.2021ம் நாளன்று நடத்தப்பட்டு பிறகு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 26.10.2021ம் நாளன்று TUFIDCO நிறுவனத்திடம் சமர்பிக்கப்பட்டது. மேலும் TUFIDCO நிறுவனத்தார் மூலம் கருத்துரு சரிபார்க்கப்பட்டதில் வாரச்சந்தை மேம்படுத்துதல் பணிக்கு தேவையான கட்டமைப்பு வடிவமைப்பு (Structural Design) வரைபடம், மண் பரிசோதனை அறிக்கை (Soil Test Report), Topographical Map, Design for PEB Structure, Stad Pro Design Analysis, Column Footing

Design, Plinth Beam Design, Steel Structure Design, Cost Estimation for Appraisal ஆகியவற்றை தயார் செய்து சமர்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை கட்டிடகலை துறை சார்ந்த தனியார் நிறுவனத்தின் வாயிலாக தயார் செய்ய ரூ.4.90இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1146/2021/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.84**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்

**<u>பொருள் எண் : 11</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21191/2021/அம்ரூட்2 நாள்.13.11.2021ல் தெரிவித்துள்ளபடி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2021-2022ன் கீழ் ரூ.54.00 இலட்சம் வரப்பெற்றுள்ளதற்கு கீழ்காணும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| Tied Grant - ரூ.32.00 இலட்சம் ஒதுக்கீடு | | |

| | | |
|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16ல் வாரச்சந்தை பகுதியில் உள்ள நுண்உரமாக்கல் மையம் பின்புறம் புதிதாக 0.50 TPD கொள்ளளவு உள்ள உரமாக்கல் மையம் (Onsite Compost Center) கட்டுதல் பணி | 9.50 |
| 2 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 காந்திநகர் புதுக்காலனி, காந்திநகர் பட்டத்தரசி அம்மன் கோவில் பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் உள்ள ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணற்றில் உள்ள மின்மோட்டார்களை மாற்றி அமைத்தல் பணி | 1.20 |
| 3 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, திரு.வி.க தெரு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியில் புதிதாக மின்மோட்டார் பொருத்துதல் மற்றும் திரு.வி.க தெரு தரைமட்ட தொட்டி முதல் பாரத மாநில வங்கி வரை பிரதான குழாய் அமைத்தல் பணி | 9.30 |
| 4 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா நகர் நீருந்து நிலையத்தில் புதிதாக மின்மோட்டார் பொருத்துதல் மற்றும் 250mm CI பிரதான குழாய் வரை இணைப்பு குழாய் அமைத்தல் பணி | 5.50 |
| 5 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, இராமநாதபுரம் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் புதிதாக மின்மோட்டார் பொருத்துதல் | 1.00 |
| 6 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, காந்திநகர் தென்வடல் தெரு, நம்பியூர் ரோடு (உரச்சாலை அருகில்), வார்டு எண்.14 இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு மின்மோட்டார்களை மாற்றியமைத்தல் பணி | 1.00 |
| 7 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 சுல்தான் தெரு (சுபம் ஹோட்டல் அருகில்), வார்டு எண்.11 காந்திநகர் மேல்பகுதி மற்றும் வார்டு எண்.12 தங்கசாலை தெரு (பாண்டியன் கிணறு)ஆகிய பகுதிகளில் உள்ள திறந்தவெளி கிணறு மின்மோட்டார்களை மாற்றியமைத்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் பணி | 2.00 |
| 8 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07 அண்ணா நகர் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் புதிதாக மின்மோட்டார் அமைத்தல் மற்றும் திறந்த வெளி கிணறு பராமரிப்பு செய்தல் பணி | 1.00 |
| 9 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05 குமரன் தெரு, வார்டு எண்.13 அவினாசி ரோடு மற்றும் வார்டு எண்.17 மறைமலையடிகள் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள திறந்தவெளி கிணறு பராமரிப்பு செய்தல் பணி மற்றும் புதிதாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைத்தல் பணி | 2.00 |
| UnTied Grant – **ரூ.22.00 இலட்சம் ஒதுக்கீடு** | | |
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் அனைத்து வார்டுகளிலும் உள்ள தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளில் உள்ள குடிநீர் குழாய் பதிக்கப்பட்ட சேதமடைந்த மற்றும் சிறு குழிகளை சரிசெய்தல் பணி. | 7.50 |

| | | |
|---|---|---|
| 2 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 ஜெ.ஜெநகர் சமுதாய கழிப்பிடத்திற்கு புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்தல், மின்மோட்டார் பொருத்துதல் மற்றும் கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல். | 3.00 |
| 3 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 வாரச்சந்தை பகுதியில் புதிதாக கால்நடை கொட்டகை அமைத்தல் பணி. | 4.75 |
| 4 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 ஜெ.ஜெ.நகர் பகுதியில் மழைநீர் வடிகாலின் குறுக்கே சிறுபாலம் கட்டுதல் பணி. | 4.8 |
| 5 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 ஜெ.ஜெ.நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 2.00 |

மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.54.55 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந . க . **எண்.** 1499/2021/இ 1)

**அலுவலகக்குறிப்பு** :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.85**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்

## <u>பொருள் எண் : 12</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை வீதியில் அம்மா உணவகத்தின் கிழபுறத்தில் வடக்கு நோக்கி ஏழு கடைகள் கட்டுதல் பணி மேற்கொள்ள ரூ.9.70 இலட்சத்திற்கு 19.08.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், திருமதி.வள்ளியம்மாள், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி பணியினை 3 மாத காலத்திற்குள் முடிக்க 09.09.2020 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி கூடுதலாக 7 எண்ணிக்கை கடைகள் கட்டும் இடத்தில் மின்சார வாரியத்தின் உயர்மின் அழுத்த மின்கம்பம் உள்ளதாலும், நகராட்சியில் போதுமான நிதி இல்லாததாலும், மொத்தம் 7 எண்ணிக்கை கடைகளில் Pre auction முறையில் 5 எண்ணிக்கை கடைகள் மட்டுமே ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி எடுக்கப்பட்டுள்ளதாலும், 7 எண்ணிக்கை கடைகள் கட்டுவதற்கு பதிலாக 5 எண்ணிக்கை கடைகள் மட்டுமே கட்டுவதற்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி திருத்திய மன்றப்பொருள் (நகர்மன்ற தீர்மான எண்.267 நாள்.14.12.2020) அனுமதிக்கப்பட்டதில், தற்போது வரை பணி துவங்கப்படாமல் உள்ளது.

எனவே மேற்படி கடைகளை எடுத்த ஏலதாரர்கள் கடைகள் பற்றிய பணி முன்னேற்றம் தொடர்பாக நகராட்சி அலுவகத்தில் அதிகாரிகளை அடிக்கடி சந்தித்து கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இதனால் நகராட்சிக்கும், நகராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

இதனால் பணியினை விரைந்து முடிக்க இதன் மூலம் அறிவுறுத்தப்பட்டது. தவறும் பட்சத்தில் நகராட்சி ஒப்பந்த சட்ட விதிகளின்படி இப்பணிக்கான வைப்புத்தொகை (Deposit) பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் தங்களை பொறுப்பாக்கி வசூலிக்கப்படும் என 01.11.2021, 11.11.2021 மற்றும் 18.11.2021 நாளிட்ட அறிவிப்பு கடிதங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தும் இப்பணி தொடங்கப்படாத நிலையிலேயே உள்ளது. எனவே இந்த பணிக்கு வழங்கப்பட்டிருந்த பணி உத்தரவினை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந. க. எண்.914/2020/இ1)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.86**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் : 13**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/P3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.06.06.2019ன் படி

பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.10.2021 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை மேலும் ஒரு மாதம் (01.11.2021 முதல் 30.11.2021 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.12.2021 முதல் 31.12.2021 வரை) விபிஎன் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.25/2016/எச்1)

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)பொது சுகாதாரபிரிவு அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.87**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.11.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் : 14**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியில் 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125

நாள்.**29.05.2020**ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது **30.11.2021** உடன் முடிவடைவதால் தொற்று நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதியும் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை மேலும் ஒரு மாதம் **(01.12.2021** முதல் **31.12.2021)** பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)பொது சுகாதாரபிரிவு அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.88**

**தீர்மானம் :** அனுமதிக்கப்படுகிறது

(ஒப்பம்) திரு. மு. சக்திவேல்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.